PTF/01/Circular/01 2021.05.31

சுற்றறிக்கை இலக்கம்: PTF/03-2021 (i)

**சகல மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்**
**மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு,**

**கொவிட் - 19 பேரிடர் நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.5,000/= கொடுப்பனவொன்றைச் செலுத்துதல்**

கொவிட் - 19 பேரிடர் நிலைமையின் மூன்றாவது பரவல் காரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.5,000/= கொடுப்பனவொன்றைச் செலுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. இதன்போது என்னால் வெளியிடப்பட்டுள்ள PTF/03-2020, PTF/03/2020 (i), PTF/03/2020 (ii), PTF/03/2020 (iii), PTF/03/2020 (iv) ஆம் இலக்க சுற்றறிக்கைகள் ஊடாக இனங்காணப்பட்டு, தற்போது தகுதி பெறுகின்ற குடும்பங்கள் இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள அடிப்படையில் உரிமை பெறுகின்றன.

03. மேற்குறிப்பிட் சுற்றறிக்கைகள் ஊடாக இனங்காணப்படாத, இச்சந்தர்ப்பத்தில் ரூ.5,000/= கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கின்ற ஏதேனும் குடும்பமொன்று, PTF/03/2020 (ii) ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து கிராமியக் குழுவின் உறுப்பினர் ஒருவரிடம் ஒப்படைக்கலாம். அப்போது, கிராமியக் குழுவின் விதந்துரையின் அடிப்படையில் பிரதேச செயலாளரின் அனுமதியுடன் இந்தக் கொடுப்பனவைச் செலுத்துவதற்குப் பொருத்தமான புதிய குடும்பமொன்று என இனங்காணலாம்.

04. தேருநர் இடாப்பில் ஒரு வீட்டிலக்கத்தின் கீழ் பதிவு செய்திருப்பினும், அந்த வீட்டிலக்கத்தின் பிரதான குடும்பத்திற்கு மேலதிகமாக, உப குடும்பமொன்று அல்லது அதற்கு அதிகமானவை இருப்பின், அவர்கள் PTF/03/2020 (iv) ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் இனங்காணப்பட்டுள்ளமையினால், அந்த உப குடும்பங்களுக்கும் இந்தக் கொடுப்பனவு கிடைக்கும். அந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்ட பின்பு உப குடும்பங்களாகப் பிரிந்திருப்பின், அது சம்பந்தமான இறுதித் தீர்மானத்தைப் பிரதேச செயலாளர் மேற்கொள்ள வேண்டும்.

05. **ரூ.5,000/= கொடுப்பனவு கிடைக்கின்ற குடும்பங்களின் வகைப்படுத்தல்**

5.1 குறைநிரப்புத் தொகையை செலுத்துவதன் அடிப்படையில் ரூ.5,000/= கிடைக்கும் குடும்பங்கள்

மத்திய அரசினால் குடும்பங்களுக்கு ஏலவே செலுத்தப்படுகின்ற முதியோர் கொடுப்பனவு, விவசாய ஓய்வூதியம், மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூர்த்தி நிவாரணக் கொடுப்பனவு ரூ.5,000/= ஆகும் வகையில் எஞ்சிய தொகை மாத்திரம் செலுத்தப்படும். அதற்கேற்ப, பயனாளிக்கு ஒரு தடவையில் ரூ.5,000/= கிடைக்கும். மேற்குறிப்பிட்ட பல கொடுப்பனவுகள் ஏதேனும் குடும்பமொன்றுக்கு செலுத்தப்படின், ரூ.5,000/= கொடுப்பனவின் குறைநிரப்புத் தொகையை செலுத்துவதற்கு உயர்ந்தபட்ச நிதிப் பெறுமானத்தைக் கொண்ட கொடுப்பனவையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

5.2 கருணைக் கொடுப்பனவு கிடைக்கின்ற குடும்பங்கள்

ஏதேனும் குடும்பமொன்றுக்கு மத்திய அரசினால் செலுத்தப்படுகின்ற ஏனைய கொடுப்பனவுகள் கிடைக்காமல், நூற்றாண்டுப் பூர்த்தி முதியோர் கொடுப்பனவு அல்லது அங்கவீனர் கொடுப்பனவு அல்லது சிறுநீரகக் கொடுப்பனவு எனும் ரூ.5,000/= கொடுப்பனவுகளில் ஒரு கொடுப்பனவு மாத்திரம் தற்போது கிடைக்கும்போது, அவர்களுக்கு மாத்திரம் விசேடமானதாக அமையும் வகையில் ரூ.3,000/= கருணைக் கொடுப்பனவொன்று செலுத்தப்படும்.

5.3 ரூ.5,000/= கொடுப்பனவு முழுமையாகக் கிடைக்கின்ற குடும்பங்கள்

5.3.1 சமுர்த்திக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதியுடன் பட்டியலிடப்பட்டுள்ள குறைந்த வருமானமுடைய குடும்பங்கள்

5.3.2 வாழ்வாதாரத்தை இழந்தமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ள குடும்பங்கள்

5.3.3 ஆரம்ப சந்தர்ப்பத்தில் கிராமியக் குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் அல்லது ஏற்புடைய பொதுச் செயலகங்களில் காத்திருப்புப் பட்டியலில் முதியோர், அங்கவீனர், சிறுநீரகக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதியுடன் பட்டியலிடப்பட்டுள்ள குடும்பங்கள்

5.3.4 மேன்முறையீடுகள் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள குடும்பங்கள்

5.3.5 அரசின் எந்தவொரு கொடுப்பனவையும் பெற்றுக்கொள்ளாத மற்றும் இலவச சேவைகளை வழங்குகின்ற சமயஸ்தலங்கள், முதியோர் இல்லங்கள், சிறுவர் இல்லங்கள், அங்கவீனர் இல்லங்கள் போன்ற நலனோம்புகை நிலையங்களில் தங்கியுள்ள நான்கு பேரை ஒரு குடும்பமாகக் கருதி கிராமியக் குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்ற பயனாளி அலகுகள்

5.3.6 இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பயன்படுத்தி, இச்சந்தர்ப்பத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து, கிராமியக் குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுகின்ற குடும்பங்கள்

06. இந்த முழுமையான கொடுப்பனவுச் செயன்முறையிலும் தெரிவுசெய்யப்பட்ட குடும்பமொன்றுக்கு கிடைப்பது ஒரு ரூ.5,000/= கொடுப்பனவு அல்லது கருணைக் கொடுப்பனவு மாத்திரமாகும். மேற்குறிப்பிட்ட **5.3** ஆம் பந்தியின் **5.3.1, 5.3.2, 5.3.3, 5.3.4** ஆம் உப பந்திகளின் கீழ் ஆரம்ப சந்தர்ப்பத்தில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்கள் தொடர்பாக கிராமியக் குழுவினால் மீண்டும் பரந்த மீளாய்வொன்றைச் செய்து, குழுவின் விதந்துரைகளை பிரதேச செயலாளருக்கு வழங்கி, பிரதேச செயலாளரின் அனுமதியின் அடிப்படையில் கொடுப்பனவு செய்ய முடியும். மேலும் **5.3.2 , 5.3.4, 5.3.6** ஆம் உப பந்திகளின் கீழ் குடும்பங்களைத் தெரிவு செய்யும்போது பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள காலத்தினுள் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களையும் கருத்திற்கொள்வது பொருத்தமானதாகும்.

07. PTF/03/2020 (ii) ஆம் இலக்க, 2020.04.15 ஆந் திகதிய சுற்றறிக்கையில் **இணைப்பு – 01** இல் அலுவலக உபயோகத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ள படிவத்திற்குப் பொருந்தும் வகையில் பயனாளி ரூ.5,000/= கொடுப்பனவை அல்லது கருணைக் கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டார் என்பதற்கான அத்தாட்சியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்வது அத்தியாவசியமானதாகும்.

08. இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொடுப்பனவுகளைச் செலுத்துவதனை வகைப்படுத்திக் கொள்ளுமாறும், அந்த வகைப்படுத்தலுக்கு ஏற்ப கொடுப்பனவு செய்வதன் முன்னேற்றத்தை மாவட்டச் செயலாளர் ஜனாதிபதி செயலணிக்கு அறிவிக்குமாறும் தயவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

**ஒப்பம்/ காமினீ எஸ். செனரத்**
பிரதம அமைச்சரின் செயலாளர்

**பிரதிகள்:**

1. ஜனாதிபதியின் செயலாளர்
2. அமைச்சரவையின் செயலாளர்
3. கணக்காய்வாளர் நாயகம்

} தயவுடன் தகவலுக்காக

4. செயலாளர், நிதியமைச்சு
5. செயலாளர், சுகாதார அமைச்சு
6. செயலாளர், கமத்தொழில் அமைச்சு
7. செயலாளர், அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
8. செயலாளர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
9. செயலாளர், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு
10. செயலாளர், சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
11. செயலாளர், ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு
12. செயலாளர், அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு
13. தலைவர், கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
14. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலுத்திட்டத் திணைக்களம்
15. பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்
16. கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம்
17. பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம்
18. பணிப்பாளர், தேசிய வயது முதிர்ந்தோர் செயலகம்
19. பணிப்பாளர், வலது குறைந்தோருக்கான தேசிய பொதுச் செயலகம்

} தேவையான நடவடிக்கைகளுக்காக

| |
|---|
| சுற்றிக்கை தொடர்பான மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கு – கே. பிரஸன்ன சந்தித் அவர்கள்<br>சிரேஷ்ட ஒருங்கிணைப்பாளர்<br>ஜனாதிபதி செயலணி<br><br>077 36 415 63 |

**இணைப்பு**

**கொவிட் - 19 பேரிடர் நிலைமையின் மூன்றாவது பரவல் காரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.5,000/= கொடுப்பனவைச் செலுத்துதல்**

**மாவட்டம்:** **திகதி:**

| # | கொடுப்பனவு பெறும் குடும்பங்கள் | கொடுப்பனவு செய்யப்பட்டோரின் எண்ணிக்கை | செலவான தொகை |
|---|---|---|---|
| **குறைநிரப்புத் தொகையை செலுத்துவதன் அடிப்படையில் ரூ.5,000/= கிடைக்கும் குடும்பங்கள்** | | | |
| 1. | முதியோர் கொடுப்பனவைப் பெறும் குடும்பங்கள் | | |
| 2. | சமூர்த்திப் பயனாளிக் குடும்பங்கள் | | |
| | 2.1 ரூ.420/= | | |
| | 2.2 ரூ.1,500/= | | |
| | 2.3 ரூ.2,500/= | | |
| | 2.4 ரூ.3,500/= | | |
| 3. | விவசாய ஓய்வூதியத்தைப் பெறும் குடும்பங்கள் | | |
| 4. | மீனவர் ஓய்வூதியத்தைப் பெறும் குடும்பங்கள் | | |
| | **உப மொத்தம்** | | |
| **கருணைக் கொடுப்பனவு கிடைக்கும் குடும்பங்கள்** | | | |
| 5. | நூற்றாண்டுப் பூர்த்தி முதியோர் கொடுப்பனவைப் பெறும் குடும்பங்கள் | | |
| 6. | அங்கவீனர் கொடுப்பனவைப் பெறும் குடும்பங்கள் | | |
| 7. | சிறுநீரகக் கொடுப்பனவைப் பெறும் குடும்பங்கள் | | |
| | **உப மொத்தம்** | | |
| **ரூ. 5,000/= கொடுப்பனவு முழுமையாகக் கிடைக்கின்ற குடும்பங்கள்** | | | |
| **முன்னைய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் கீழ்** | | | |
| 8. | சமூர்த்திக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதியுடன் பட்டியலிடப்பட்டுள்ள குறைந்த வருமானமுடைய குடும்பங்கள் | | |
| 9. | வாழ்வாதாரத்தை இழந்தமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ள குடும்பங்கள் | | |
| 10. | ஆரம்ப சந்தர்ப்பத்தில் கிராமியக் குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் அல்லது ஏற்புடைய பொதுச் செயலகங்களில் காத்திருப்புப் பட்டியலில் முதியோர், அங்கவீன, சிறுநீரகக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதியுடன் பட்டியலிடப்பட்டுள்ள குடும்பங்கள் | | |
| 11. | மேன்முறையீடுகள் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள குடும்பங்கள் | | |
| | **உப மொத்தம்** | | |
| **இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கீழ்** | | | |
| 12. | அரசின் எந்தவொரு கொடுப்பனவையும் பெற்றுக்கொள்ளாத மற்றும் இலவச சேவைகளை வழங்குகின்ற நலனோம்புகை நிலையங்களிலுள்ள பயனாளி அலகுகள் | | |
| 13. | இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பயன்படுத்தி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து, கிராமியக் குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுகின்ற குடும்பங்கள் | | |
| | **உப மொத்தம்** | | |
| | **முழு மொத்தம்** | | |

…………………………………………

**மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்**

**இணைப்பு - 01**

## <u>நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு ஏற்ப வாழ்வாதாரத்தை இழந்தமையின் அடிப்படையில் அரசினால் வழங்கப்படுகின்ற ரூ.5,000/= கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்</u>

1. வீட்டுத் தலைவரின் பெயர் : ..........................................................................................
2. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை: ..........................................................................................
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :..........................................................................................
4. பிறந்த திகதி : ..........................................................................................
5. நிரந்த வதிவிட முகவரி : ..........................................................................................
6. பிரதேச செயலகப் பிரிவு : ..........................................................................................
7. கிராம உத்தியோகத்தர் பிரிவு : ..........................................................................................
8. வீட்டிலக்கம் : ..........................................................................................
9. செய்த தொழில் : ..........................................................................................
10. அந்த தொழில் சம்பந்தமாக பதிவு செய்திருப்பின், பதிவிலக்கம்: .................................
11. பதிவு செய்த நிறுவனம் : ..........................................................................................
12. அரசிடம் ரூ.5,000/= கொடுப்பனவைக் கோருவதற்கான் காரணம்:
..........................................................................................................................
..........................................................................................................................
..........................................................................................................................

மேற்குறித்த தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகிறேன்.

...................................... ........................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

***<u>அலுவலக உபயோகத்திற்கு</u>***

....................................................... பிரதேச செயலகப் பிரிவில்...................................................... கிராம உத்தியோகத்தர் பிரிவில் வதியும்......................................................... ஆகிய நான், ......................................... ஆந் திகதி கொரோனா வைரசின் பரவல் காரணமாக பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டமையினால் வாழ்வாதாரத்தை இழந்த குடும்ப அலகொன்றுக்கு அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி அரசினால் வழங்கப்படுகின்ற ரூ.5,000/= கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டேன் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.......................................................
பெற்றுக்கொண்டதாக விண்ணப்பதாரியின் கையொப்பம்

சாட்சிகள்:

01. கிராம உத்தியோகத்தர் பெயர் : ............................................... கையொப்பம் : ..........................
02. சமூர். அபி. உத்தியோகத்தர் பெயர்: ...............................................
கையொப்பம்: ..........................
திகதி: .........................